# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 557/2024**

**Prosecution witness : அ.சா.7** **Date : 16/11/2024**

| | |
|---|---|
| **Name : அய்யந்துரை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பூலம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2024ம் தேதி மேட்டூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது காலை 7.00 மணிக்கு பொறுப்பு காவல் ஆய்வாளர் திருமதி.தனலட்சுமி என்பவருக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் அன்று அங்கு நிலையத்திற்கு வந்த சேலம் C.I.U. தலைமை காவலர் 1403 திரு.கண்ணன் என்பவர் நிலையத்தில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஆகியோருடன் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சரகம் எதிரியின் வீட்டில் அரசு மதுபானத்தை வாங்கி பதுக்கி வைத்திருந்ததாக தகவல் கிடைத்தது.

2. காலை 8.00 மணிக்கு எதிரியின் வீட்டிற்கு அருகே சென்றபோது அங்கு அவரது வீட்டில் இருந்த ஒருவர் தப்பி ஓட சந்தேகப்பட்டு காவல் ஆய்வாளர் தலைமையில் அவரது வீட்டினுள் சென்று சோதனை செய்தபோது சிவா என்பவர் அங்கு உள்ள இருந்தார். அப்போது அவரது வீட்டின் பாத்ரூம்பில் சோதனை செய்தபோது ஐந்து வெள்ளை நிற சாக்கு மூட்டைகளில் சுமார் 180 ml அளவுள்ள அரசு மதுபான பாட்டில்களை பதுக்கி வைத்திருந்தார்.

3. அப்போது அவரை விசாரிக்க எனது பெயர் சிவா என்றும் இந்த பாட்டில்களை

தேர்தல் விடுமுறை வரஇருப்பதால் அதிக விலைக்கு விற்க வேண்டி ஜலகண்டாபுரம் அரசு மதுபான கடையில் சூப்பர்வைஸ்சர் அருள், விற்பனையாளர் பச்சமுத்து ஆகிய இருவரும் நல்ல பழக்கம் என்பதால் கடந்த 15 நாட்களாக கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி சேர்த்து வைத்திருந்தார்கள்.

4. அதில் அதிக போதை தருவதற்காக Semens என்ற இரண்டு பீரந்தி பாட்டில்களில் அதிக போதை தருவதற்காக ஊமத்தங்காய் விதையை அரைத்து அதில் கலந்து வைத்துள்ளார்கள். அவரையும், அரசு மதுபான பாட்டில் 5 மூட்டை 1820 பாட்டில்களை காவல் வாகனத்தில் ஏற்றி வந்து மேட்டுர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு கொண்டுவந்து விசாரித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரி சிவா என்பவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

5. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் கண்ணன் தலைமை காவலர் கையொப்பம் செய்தார். மேற்சொன்ன வாக்குமூலம் சிவா என்பவர் ஜலகண்டாபுரத்தில் உள்ள பாண்டியன் வளவில் உள்ள எதிரியின் வீட்டில் வைத்து காவல் ஆய்வாளர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாயில் சொல்ல சொல்ல பதியப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் தான் **அ.சா.ஆ.3** ஆகும்.

6. என்னிடம் காட்டப்படும் பாட்டில்களில் உள்ள மதுபானங்கள் அனைத்தும் மொத்தம் 1820 காவல் ஆய்வாளர் அவர்கள் வெள்ளை நிற சாக்கு பையில் இருந்த 5 மூட்டைகள் கைப்பற்றப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் கண்ணன் தலைமை காவலர் கையொப்பம் செய்தார். காவல்ஆய்வாளர் அவர்கள் வழக்கு சொத்தை கைப்பற்றும்போது மகஜர் தயார் செய்தார். காவல் நிலையத்தில் வைத்து

தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் தான் **அ.சா.ஆ.4** ஆகும். வழக்கு சம்மந்தமாக ஆய்வளார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒம்/-D.மயில்சாமி
**நீதிமன்ற நடுவர் எண்-2,**
**மேட்டூர்.**